## தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த
# திருப்பள்ளியெழுச்சி

### திருப்பள்ளியெழுச்சி தனியன்கள்

### திருமாலையாண்டான் அருளிச் செய்தது

தமேவ[1] மத்வா பரவாஸுதே3வம்
ரங்கே3ஷயம் ராஜவத3ர்ஹணீயம் |
ப்ராபோ3திகீம் யோக்ருத ஸூக்திமாலாம்
ப4க்த2ாங்க்4ரி ரேணும் ப3க3வந்தமீடே ||

### திருவரங்கப் பெருமாள் அரையர் அருளிச் செய்தது

மண்டங்குடி என்பர் மாமறையோர் மன்னிய சீர் *
தொண்டரடிப்பொடி தொன்னகரம் * - வண்டு
திணர்த்த வயல் தென்னரங்கத்தம்மானைப் * பள்ளி
உணர்த்தும் பிரான் உதித்த ஊர்

## தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த
# திருப்பள்ளியெழுச்சி[2]
## (ஸ்ரீரங்கநாதனைத் துயில் உணர்த்தல்)

917 * கதிரவன் குண திசைச் சிகரம் வந்தணைந்தான் *
கன இருள் அகன்றது காலையம் பொழுதாய் *
மது விரிந்தொழுகின[3] மாமலர் எல்லாம் *
வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி **
எதிர் திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த *
இருங் களிற்றீட்டமும் பிடியொடு முரசும் *
அதிர்தலில் அலை கடல் போன்றுளதெங்கும் *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 1

918 கொழுங் கொடி முல்லையின் கொழுமலர் அணவிக் *
கூர்ந்தது குண திசை மாருதம் இதுவோ *
எழுந்தன மலர் அணைப் பள்ளி கொள்[4] அன்னம் *
ஈன்பனி நனைந்த தம் இருஞ்சிறகுதறி **
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ் வாய் *

---

[1] த்வாமேவ
[2] இது நித்யாநுஸந்தாநம்
[3] விருந்தொழுகின
[4] கொண்டு

வெள்ளெயிறுற அதன் விடத்தினுக்கு அனுங்கி *
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 2

919 சுடரொளி பரந்தன சூழ் திசை எல்லாம் *
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி *
படரொளி பசுத்தனன் பனி மதி இவனோ *
பாயிருள் அகன்றது பைம்பொழில் கமுகின் **
மடலிடைக் கீறி வண் பாளைகள் நாற *
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ *
அடலொளி திகழ் தரு திகிரியந் தடக்கை *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 3

920 மேட்டிள மேதிகள் தளை விடும் ஆயர்கள் *
வேய்ங்குழல் ஓசையும் விடை மணிக் குரலும் *
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள் *
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை **
வாட்டிய வரி சிலை வானவர் ஏறே! *
மாமுனி வேள்வியைக் காத்து * அவபிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தி எம் அரசே! *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 4

921 புலம்பின புட்களும் பூம்பொழில்களின் வாய் *
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி *
கலந்தது குண திசை கனைகடல் அரவம் *
களி வண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த **
அலங்கலன் தொடையல் கொண்டு அடியிணை பணிவான் *
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா! *
இலங்கையர் கோன் வழிபாடு செய் கோயில் *
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே 5

922 இரவியர் மணி நெடும் தேரொடும் இவரோ? *
இறையவர் பதினொரு விடையரும் இவரோ? *
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ? *
மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி **
புரவியோடு ஆடலும் பாடலும் தேரும் *
குமரதண்டம் புகுந்தீண்டிய வெள்ளம் *
அருவரை அனைய நின் கோயில் முன் இவரோ? *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 6

923 அந்தரத்தமரர்கள் கூட்டங்கள் இவையோ? *
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ? *
இந்திரன் ஆனையும் தானும் வந்திவனோ? *

எம்பெருமான் உன கோயிலின் வாசல் **
சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க *
இயக்கரும் மயங்கினர் திருவடித் தொழுவான் *
அந்தரம் பாரிடம் இல்லை மற்றிதுவோ? *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 7

924 வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க *
மாநிதி கபிலை ஒண் கண்ணாடி முதலா *
எம்பெருமான் படிமக்கலம் காண்டற்கு *
ஏற்பனவாயின கொண்டு நன் முனிவர் **
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ? *
தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி *
அம்பர தலத்தில் நின்றகல்கின்றது இருள் போய் *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 8

925 * ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி *
யாழ் குழல் முழவமோடு இசை திசை கெழுமி *
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள் *
கந்தருவர் அவர் கங்குலுள் எல்லாம் **
மாதவர் வானவர் சாரணர் இயக்கர் *
சித்தரும் மயங்கினர் திருவடித் தொழுவான் *
ஆதலில் அவர்க்கு நாள் ஓலக்கம் அருள *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 9

926 * கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ? *
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ? *
துடி இடையார் சுரி குழல் பிழிந்துதறித் *
துகில் உடுத்தேறினர் சூழ் புனல் அரங்கா! **
தொடை ஒத்த துளவமும் கூடையும் பொலிந்து *
தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி என்னும்
அடியனை * அளியன் என்றருளி உன் அடியார்க்கு
ஆட்படுத்தாய்! * பள்ளி எழுந்தருளாயே! 10

**அடிவரவு:** கதிர் கொழு சுடர் மேட்டு புலம்பின இரவியர் அந்தரம்
வம்பவிழ் ஏதம் கடி அமலன்

**தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்**